# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| HMOP.No. 122/2016 | Date : 27.03.2025 | PW 1 |
|---|---|---|
| Name: ரங்கசாமி | த/பெ. அழகேசன் | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக எத்தனை மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 6 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தோம். மேற்படி 6 மாதங்கள் முழுவதும் எதிர்மனுதாரர் என்னை திட்டி துன்புறுத்தியது குறித்து ஆதாரம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரரின் செல்போனில் இருந்து எனது செல்போனுக்கு அனுப்பிய மெசேஜ்களை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தில் எனது குறுஞ்செய்தி எதுவும் இல்லாமல் எதிர்மனுதாரரின் குறுஞ்செய்தி மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் எந்த குறுஞ்செய்தியும் எதிர்மனுதாரருக்கு அனுப்பவில்லை. அவர்தான் எனக்கு அனுப்பினார். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி குறுஞ்செய்திகளில் எனது செய்தியை மட்டும் அழித்துவிட்டு எதிர்மனுதாரர் எனது செய்திக்கு அனுப்பிய பதிலை மட்டும் எடுத்து ம.சா.ஆ.3 ஆவணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 29.05.2015 ந்தேதி திருமணம் நடந்தது. எங்களுக்கு குழந்தை 26.05.2016 ந்தேதி பிறந்தது. ம.சா.ஆ. 3 ஆவணத்தில் 24.05.2016 ந்தேதி எதிர்மனுதாரர் குறுஞ்செய்தி அனுப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அப்போது எதிர்மனுதாரர் பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் மருத்துவமனையில் இருந்து அவர் குறுஞ்செய்தி அனுப்பினார். எதிர்மனுதாரர் பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்திலும் நான் எதிர்மனுதாரரை திட்டி அவருக்கு மனதளவிலும், உடலளவிலும் துன்புறுத்தியுள்ளேன் என்றும் அதற்காக எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் குறுஞ்செய்திகளை மட்டும் எடுத்து எதிர்மனுதாரர் என்னை திட்டியதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகளை செய்ய தவறியதால் எதிர்னுதாரருக்கும் சேர்ந்து கடையில் உணவு வாங்கி வந்து கொடுத்தேன் என்பது குறித்து ஆதாரம் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஆதாரம் ஒப்படைக்கவில்லை ஆனால் நான்தான் உணவு வாங்கி கொடுத்தேன். காலையிலும் எதிர்மனுதாரர் உணவு தயாரிக்கமாட்டார் கடையில்தான் வாங்கி கொடுப்பேன் என்றால் சரிதான். மதிய உணவும் நான் எதிர்மனுதாரருக்கு வாங்கி கொடுத்துவிட்டுதான் வேலைக்கு செல்வேன். எனது வீட்டிற்கும் நான் வேலை பார்க்கும் இடத்திற்கும் இடையே சுமார் 15 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் காற்றாலையில் (wind mill)லில் டெக்னீஷியனாக வேலை செய்கிறேன். எதிர்மனுதாரர் மீது குற்றம் கூறும்

நோக்கத்தோடு சிறிய சிறிய விசயங்களான எதிர்மனுதாரருக்கு சாப்பாடு வாங்கி கொடுத்த விவரத்தையும் கூறி விவாகரத்து கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு மாத சம்பளம் ரூ.15,000/– ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் தனக்கு மாதம் ரூ.20,000/– தரவேண்டும் என்று சொன்னதாகவும், அதற்கு நான் மாதம் ரூ.7,500/– மாத சம்பளம் பெற்று வருகிறேன் என்றும் எவ்வாறு ரூ.20,000/– கொடுக்க முடியும் என்று சொன்னதாகவும் ஆனால் தற்போது எனக்கு மாத சம்பளம் ரூ–15,000/– என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாதம் ரூ.7,500/– மாத சம்பளம் பெற்று வந்த நான் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் சேர்த்து மூன்று வேலையும் கடையில் சாப்பாடு வாங்கி சாப்பிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அலுவலகத்திற்கு சென்று வந்த பிறகு வீட்டு வேலைகள் செய்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காலையில் 9 மணிக்கு அலுவலகத்திற்கு சென்றுவிட்டு இரவு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்று தெரியாத நான் வீட்டிற்கு வந்த பிறகு வீட்டு வேலைகள் செய்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–ரங்கசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.